

# அறிவு
# மனோநிலைகள்
# பழக்கங்கள்
# அளவீடு
# இலங்கையின்
# சமாதான நடைமுறை

## சுருக்கப் பிரதி

Democracy and Good Governance in Sri Lanka
Inter University Debate Series - 2
Sociology

Pradeep Peiris
Social Indicator - Centre for Policy Alternatives

SOCIAL INDICATOR - CENTRE FOR POLICY ALTERNATIVES

2004

Academy for Educational Development

"இலங்கை சமாதான ஆதரவுக் கருத்திட்டத்திற்காக" 386-A-00- 04-00161-00 இலக்க இணைந்த நடுத்தீர்வை கூட்டுறவு உடன்படிக்கையின் கீழ் ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையின் (யுஎஸ்எயிட்) ஊடாக ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியுடன் கல்வி அபிவிருத்தி கலைக்கழகத்தினால் அளிக்கப்பட்ட தொழில்நுட்ப மற்றும் நிதிசார் ஆதரவுடன் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. வெளிப்படுத்தப் பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோனுக்கு (ஆக்கியோர்களுக்கு) உரியது என்பதுடன், ஐக்கிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையின் கருத்துக்களைக் கட்டாயமாகப் பிரதிபலிக்கமாட்டா.

Thanuj/mu

## சுருக்கப் பிரதி

கொழும்பு 7, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சோஷல் இன்டிகேட்டர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அறிவு, மனோநிலைகள், பழக்கங்கள், மற்றும் அளவீடுகள் தொடர்பான ஆய்வு 2004 அறிக்கையின் ஒரு சுருக்கப் பிரதியாகும். இப்பிரசுரம் வாசகர்களுக்கு அதன் நிறைவேற்று சாராம்சம், அறிவு, மனோநிலைகள், பழக்கங்கள்மற்றும் அளவீடுகள் தொடர்பான ஆய்வு 2004 ற்கான ஒரு முன்னுரையை வழங்குவதுடன் அதன் பரிந்துரைகளையும் ஒட்டுமொத்தமான அறிவு, மனோநிலைகள், பழக்கங்கள்மற்றும் அளவீடுகள் தொடர்பான ஆய்வு 2004 க்கான கட்டமைப்பை வாசகர்களுக்கு பரிச்சயப்படுத்தும் நோக்கையும் கொண்டுள்ளது.

இப்பிரசுரத்தின் வெளியீட்டாளர்களான சோஷல் இன்டிகேட்டர் நிறுவனம் அறிவு, மனோநிலைகள், பழக்கங்கள்மற்றும் அளவீடுகள் தொடர்பான ஆய்வு 2004 அறிக்கையின் இறுதி அறிக்கையினை பெற்றுக் கொள்வதற்கு அவர்களின் இணையத் தளமான **www.cpalanka.org/polling.html** இனை உபயோகிக்குமாறு வாசகர்களை ஊக்குவிக்கின்றது.

(C) Copyright -Social Indicator - December 2004



# முன்னுரை

2003 மார்ச்சிலிருந்து பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை, இலங்கையில் பேச்சுவார்த்தை யிலான சமாதானத்திற்கான தேடலில் சுற்றிவளைத்துக் கொண்டுள்ள பல்வாறான சவால்களை புறவரை செய்கின்றது. பேச்சுவார்த்தையிலான அரசியல் மற்றும் அரசியலமைப்பு தீர்வானது அதன் நீடித்த காலத்திற்கும், வெற்றிக்கும் அவசியமான சட்டபூர்வதன்மையையும், ஆதரவையும் கொண்டிருப்பதென்றால், கஷ்டமான இணக்கப்பாடுகளையும், மாதிரிகளையும், பெயர்வுகளையும் வேண்டுகின்றன.

எவ்வாறு ஒரு பேச்சுவார்த்தையிலான தீர்வு கொண்டு வரப்பட வேண்டும், அது எதற்குப் பராதீனப்படுத்தப்பட வேண்டும் என்பன தொடர்பான கருத்தில் வேறுபாடுகளைச் சுருக்கமாக வருணித்து, சமாதான நம்பிக்கைக் காட்டி (PCI) மற்றும் KAPS 2003 என அழைக்கப்படும் 2002 முதல் சமாதான நடைமுறை மீது சோஷல் இன்டிகேட்டரினால் நடத்தப்படும் அளவீடுகள் இதை எடுத்துக் காட்டியுள்ளன. அதேவேளை, இவ்வளவீடுகளிலிருந்து தெளிவானதும், முரணற்றதுமான செய்தியானது ஆயுத மோதல் இன்மையொன்றாக புரிந்து கொள்ளப்பட்டுள்ள சமாதானத்திற்கான பரந்ததும், உறுதியானதுமான ஆதரவுத் தளமாகும்.

பேச்சுவார்த்தையிலான தீர்வொன்றின் ஆரம்ப எதிர்பார்ப்பு வீழ்ச்சியடைந்த வேளையில் நடத்தப்பட்ட பிரசித்தமான உணர்வொன்றையும் சமாதானத்திற்கான கோரிக்கையையும் வெளிப்படுத்துகின்றது. அக்கறையை ஏற்படுத்தும் விதத்தில் கூட இறுதியான தீர்வொன்றில் சில "விட்டுக் கொடுப்புகளையும்", இணக்கப்பாடுகளையும் ஏற்றுக்கொள்வதற்கு பொதுசனத்தின் சார்பில் விருப்பொன்றை அது வெளிப்படுத்துகின்றது. இதன் பிரகாரம், சகல KAS அளவீடுகளுமே தீர்மானமெடுத்தல் மற்றும் கருத்து வகுப்போர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுவதனால், பொது மக்களின் உண்மையான நம்பிக்கைகளும், கரிசனைகளும், அச்சங்களும், மற்றும் சமாதான நடைமுறையில் சக்திவாய்ந்த போக்குகளுக்கும், முன்னேற்றங்களுக்குமான ஆரதரவில் அல்லது எதிர்ப்பில் செயலாற்று முறையின் சாத்தியமும், KAPS 2004இன் முடிவுகளும் தீர்மானமெடுத்தலையும், ஆதரவு தேடுதல் முயற்சிகளையும் அறிவிப்பதற்காக பயன்படுத்தப்படும் என மா.கொ.நி - சோ.இ.ஆகியன மனப்பூர்வமாக நம்பிக்கை கொண்டுள்ளன. குறிப்பாக, KAPS 2004இல் மாதிரியை வழங்கும் போது, இந்த முயற்சிகளை மீள்சீரமைப்பதிலும், பட்டை தீட்டுவதிலும் விசேட பெறுமதியாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

பேச்சுவார்த்தையிலான அரசியல் மற்றும் அரசியலமைப்பு தீர்வொன்றின் மேலான வளைவிலான நோக்கத்திற்கு பாரியளவிலான புரிந்துணர்வையும், சம்மதத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அதிக இலக்குப்படுத்தப்பட்ட ஆதரவுக்கும், தலையீட்டுக்கும் ஊக்கியொன்றாக KAPS 2004ஐ நாம் பார்க்கின்றோம். இது எமது கடப்பாட்டினை நிறைவேற்றுவதில் இலங்கையில் முன்னேற்றத்திலான ஜனநாயக சமாதானத்திற்கும், ஆட்சிக்குமான எமது பங்களிப்பின் உள்ளகப்பாகமொன்றாகும். சமாதான நடைமுறை மீதான முன்னைய சோஷல் இன்டிகேட்டர் - மா.கொ.நி. அளவீடுகளைப் போன்று, KAPS 2004 பொது மக்களுக்கு சிறந்ததாக விளங்கும் என நாம் நம்புகின்றோம். அமைதியானதும், சுபீட்சமானதும், ஜனநாயகரீதியிலானதுமான இலங்கையின் இலக்கினை எம்முடன் பங்கிடும் சகலருக்கும் இது பெறுமதியானதாகவும், உபயோகமுள்ளதாகவும் இருக்கும் என நாம் கருதுகின்றோம்.

கல்வி அபிவிருத்தி அகடமியின் (Academy for Eduaction Development) நிதிசார் உதவியுடனும், ஐக்கிய அமெரிக்கா. அரிஸோனா பல்கலைக் கழக, அரசியல் விஞ்ஞான திணைக்களத்தின் பேராசிரியரும், தலைவருமான வில்லியம் மிஷ்லர், ஐக்கிய அமெரிக்கா, வேர்ஜினியா பல்கலைக்கழக அரசாங்க, வெளிநாட்டு அலுவல்கள் திணைக்களத்தைச் சேர்ந்த ஸ்டீபன் ஃபிங்கெல் ஆகியோரின் தொழில்நுட்ப உதவியுடனும் KAPS 2004 சாத்தியப்பட்டது. இதை மா.கொ.நி. - சோஷல் இன்டிகேட்டர் நன்றியறிதலுடன் ஒப்புக்கொள்கின்றது. எம்முடனான அவர்களது கூட்டு முயற்சி எமது ஆற்றலளவைக் கட்டியெழுப்புதலை அளப்பரியளவில் உயர்த்தியுள்ளதுடன், பொதுசன அபிப்பிராயத்திற்கும், பிரசித்தமான சட்ட வாக்கத்திற்கும் இடையிலான முக்கியமான உறவிலும், நியாயமானதும், நீடித்ததும், ஜனநாயகரீதியிலானதுமான சமாதானத்திற்கான ஆதரவிலும் எமது புரிந்துணர்வை ஆழமாக்கியுள்ளது.

**கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து**

நிறைவேற்றுப் பணிப்பாளர்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

(C) Copyright -Social Indicator - December 2004



# ஒப்புக்கொள்ளல்கள்

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பொதுசனக் கருத்து ஆராய்ச்சியின் கரமான சோஷல் இன்டிகேட்டர் KAPS அளவீடுகளைச் சாத்தியப்படுத்துவதற்கு ஆதரவையும், உதவியையும் அளித்ததுடன், இதன் மூலம், சமாதான நடைமுறை மீது அறிவிக்கப்பட்டதும், இலக்குப்படுத்தப்பட்டதுமான கொள்கை வகுத்தல், ஆதரவு திரட்டுதல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான சக்திமிக்க விஞ்ஞானரீதியிலான கருவியை வழங்கியமைக்காக பின்வரும் தனிப்பட்டவர்களுக்கும், தாபனங்களுக்கும் நன்றி கூறுகின்றது.

- Ms. குவன்டொலின், ஜி.பெவிஸ், வொஷிங்டன், AEDஇன் முன்னாள் திட்ட இணையாளர், KAPS II ஐ ஆரம்பிப்பதில் அவரது வழிகாட்டலுக்கும், ஆதரவுக்கும்.
- பேராசிரியர் வில்லியம் மிஷ்லர், அரிஸோனா பல்கலைக்கழகம், பேராசிரியர் ஸ்டீபன் ∴பிங்கெல், வேர்ஜினியா பல்கலைக்கழகம், அவர்களது பெறுமதிமிக்க வழிகாட்டலுக்கும், தொழில்நுட்ப ஆதரவுக்கும்.
- அதன் ஆரம்பத்திலிருந்து KAPS அளவீடுகளுக்கு நிதிப்படுத்தியமைக்காக AED மற்றும் திரு.கிம்ஜே டீரெட்டர், பிரதம அனுசரணையாளர், AED/இலங்கை மற்றும் கலாநிதி கரோல் பெக்கர் (USAID), அவர்களது ஒத்துழைப்புக்காக.
- திரு.ஜோ.வில்லியம் (SIDA), கலாநிதி குமார் ரூபசிங்க (Foundation for coexistence), கலாநிதி ஜெஹான் பெரேரா (NPC), திரு.ஜவாட் யூசுப் (PSG), Ms. சுனிலா அபேசேகர (INFORM), திரு.ரிரல் பேர்டினன்ட் (IMPACT), திரு,ரோஹான் எதிரிசிங்க (CPA) மற்றும் பேராசிரியர் ஜே.உயன்கொட (கொழும்புப் பல்கலைக்கழகம்), கேள்விக் கொத்தை வடிவமைப்பதில் அவர்களது யோசனைகளுக்கும், ஆலோசனைகளுக்கும்.
- கலாநிதி பி.சரவணமுத்து, ம.கொ.நி.இன் நிறைவேற்றுப் பணிப்பாளர், மற்றும் திரு.கேதீஸ்வரன் லோகநாதன், மா.கொ.நி.இன் சமாதான, மோதல் அலகின் தலைவர் ஆகியோருக்கும் KAPS க்கான அவர்களது ஒதுக்கமற்ற ஆதரவுக்காக.
- அவர்களது அர்ப்பணிப்பு, பொறுப்பு, ஆர்வம், சிறந்த மனதிற்கினிய தன்மை ஆகியவற்றுக்காக சோஷல் இன்டிகேட்டரின் பணியணியினர்.

**பிரதீப் பீரிஸ்**
அலகுத் தலைவர்
சோஷல் இன்டிகேட்டர் - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

(C) Copyright -Social Indicator - December 2004



# பொருளடக்கம்

அறிமுகம் 1

நிறைவேற்றுச் சாராம்சம் 3

விதந்துரைப்புகள் 13

(C) Copyright -Social Indicator - December 2004



# அறிமுகம்

வரலாற்றிலும், கலாசாரத்திலும் வளத்தையும், நிறைந்த இயற்கையான மூலவளங்களையும் கொண்டுள்ளதும், தைரியமானதும், ஜனநாயகரீதியிலானதுமான குடிசார் மக்களைக் கொண்டுள்ளதுமான நாடாக இலங்கை விளங்குகிறது. ஆனால், நீண்டதும், விரும்பத்தகாதுமான சிவில் யுத்தத்தினால் அது சூழப்பட்டுள்ளது. ஆயிரக்கணக்கான மரணங்களையும், சமூக, பொருளாதார இடப்பெயர்வுகளையும் ஏற்படுத்திய இரண்டு தசாப்தங்களுக்கு மேற்பட்ட மோதலின் பின்னர், 2002 பெப்ரவரியில் யுத்த நிறுத்த அறிவிப்பானது நியாயமானதும், நிலையானதுமான சமாதானம் இறுதியாக அடையப்படுகின்றது என்ற உருப்படியான நம்பிக்கையை சகல தரப்பிலும் உள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுத்தியுள்ளது.

சமாதான நடைமுறைக்கு பொதுசன ஆதரவின் தன்மையையும். அளவையும் புரிந்து கொள்வதற்கு, சமாதான நடைமுறைகளுக்கு பொதுசன நம்பிக்கைகள் உச்சமாக விளங்கிய வேளையில், அதாவது 2003 ஜூனில், இலங்கையின் முதலாவது அறிவு, மனோநிலைகள், பழக்கங்கள் அளவீட்டினை (KAPS I) சோஷல் இன்டிகேட்டர் பொறுப்பேற்றுக் கொண்டது. **நியாயமானதும், இறுதியானதுமான சமாதானத்திற்காக** என்ற அளவீட்டின் இறுதி அறிக்கை (சோஷல் இன்டிகேட்டர், டிசம்பர் 2003) இலங்கையின் இனத்துவ சமுதாயங்களைப் புறம்பாக்கும் ஆழமான பிளவுகளை உறுதிப்படுத்தியதுடன், சகல இனத்துவப் பின்னணிகளையும் கொண்ட இலங்கையரின் மத்தியிலும், நாட்டின் சகல பிராந்தியங்களிலும் சமாதான நடைமுறைக்கான பரந்த ஆதரவு நிலவுவதை ஆவணப்படுத்தியது. நிரந்தரமான சமாதானம் சாதிக்கப்படும் போது, அது பாரிய அளவிலான தனிப்பட்ட சுதந்திரத்தையும், உயர்வான மனித உரிமைகளையும், ஆரோக்கியமானதும், மிகவும் உறுதிமிக்கதுமான தேசிய பொருளாதாரத்தையும் பொறுத்தளவில் வளமான பிரதிபலன்களை வழங்கும் என பெரும்பான்மையான இலங்கையர்கள் நம்பினார்கள். நிரந்தரமான சமாதானத்தைச் சாதிக்குமுகமாக, ஆகக்குறைந்தது இதுகாறுமுள்ள நிலையில் சில மாற்றங்களை ஏற்றுக்கொள்வதற்கு பெருமளவு பிரஜைகள் இணக்கமாக விளங்கினார்கள். இருந்த போதிலும், நிரந்தரமான சமாதான உடன்படிக்கைக்கு பொதுசன ஆதரவின் முழுமையான மட்டம் பற்றிய திடநம்பிக்கையை இறுதி அறிக்கை வெளிப்படுத்திய அதே வேளை, முக்கியமான துணைக் குழுக்கள் மத்தியில் சமாதான உடன்படிக்கையொன்றுக்கு குறிப்பிடத்தக்க எதிர்ப்பினையும் அது கவனத்திற்கு எடுத்தது. மேலும் சமாதானத்தைச் சாதிப்பதற்கு பெரும்பான்மையான மக்களின் அதிகப்படியான ஆதரவு அவசியம் என்பதையும், அத்துடன், பெரும்பான்மையானோர் ஆதரவளிக்கக்கூடிய சமாதான முன்னெடுப்புக்களை முன்வைப்பதற்கு அரசியல் தலைவர்களின் இணக்கமும், இயலும்தன்மையும் அவசியமானது என்று அறிக்கை எச்சரித்திருந்தது. கருத்தாளமிக்க பேச்சுவார்த்தைகளுக்கு அவசியப்படும் சமாதான முன்னெடுப்புக்களை வழங்குவதற்கு இலங்கையில் தலைவர்களின் தயார்நிலையையிட்டு அறிக்கை மேலும் வினாதொடுத்திருந்தது.

இன்று, யுத்த நிறுத்த உடன்படிக்கைகளைத் தொடர்ந்து, 3 வருடங்களின் பின், ஆரம்பத்தில் சமாதானத்தை வரவேற்று, அதில் வைக்கப்பட்டிருந்த உயர்வான நம்பிக்கைகள் மங்க ஆரம்பித்துள்ளன. உத்தியோகபூர்வ யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்திருக்கின்ற போதிலும், அது பெரிதுமே முடியும் என்பதுடன் யுத்தம் மீண்டும் ஆரம்பமாவதற்கான சாத்தியகூறுகள் பற்றிய வதந்தி பலமாக அடிபடுகின்றது. விசேடமாக கடந்த வருடம் நிகழ்ச்சிகள் நிரம்பியதாக விளங்கியது. ஏப்ரலில் தேசிய தேர்தல்கள் இடம்பெற்றதுடன், புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கம் சமாதானத்தையிட்டு முன்னைய அரசாங்கத்தின் அணுகுமுறையை விமர்சித்தது. ஆனால், அதன் சொந்த அணுகுமுறையில் பிளவுபட்டிருந்தது. எல்.ரி.ரி.ஈ.யும் உள்ளகப் பிளவுக்கு முகங்கொடுத்ததுடன், அதைத் தொடர்ந்து பிளவுபட்டது. இதன் விளைவாக நாட்டின் பல பாகங்களிலும் அரசியல் வன்முறைகள் குறிப்பிட்டளவில் அதிகரித்தன. சமாதான நடைமுறையைப் பொறுத்தளவில் சிறிதளவு பயன்மிக்க நகர்வொன்றிருந்தது என்பதுடன், முன்னால் நகர்வதற்கு குறிப்பிடத்தக்க கருத்துக்களும், விருப்புக்களும் உருவாக்கப்படவில்லை.

இப்பின்புலவுக்கு எதிராகவே, கொழும்பில் உள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் ஒன்றிணைந்து, 2004 கோடைக்காலத்தில் இலங்கை மக்களின் இரண்டாவது நாடு பூராவிலுமான **அறிவு, மனோநிலைகள், பழக்கங்கள் அளவீட்டை (Knowledge, Attitudes and Practices Survey - KAPS II)** கட்சி சார்பற்ற அளவீட்டு ஆராய்ச்சி நிலையமான சோஷல்

*உத்தியோகபூர்வ யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்திருக்கின்ற போதிலும், அது பெரிதுமே முடியும் என்பதுடன் யுத்தம் மீண்டும் ஆரம்பமாவதற்கான சாத்தியகூறுகள் பற்றிய வதந்தி பலமாக அடிபடுகின்றது......"*

(C) Copyright -Social Indicator - December 2004

இன்டிகேட்டர் பொறுப்பேற்றது. இந்த அளவீட்டுக்கு பகுதியளவிலான உதவி கொடையை ஐக்கிய ராஜாங்க சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை (USAID) அளித்து ஆதரவளித்தது. மேலும் 130க்கு மேற்பட்ட நாடுகளில் உதவித் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் இலாபமற்ற தாபனமொன்றான கல்வி அபிவிருத்தி கழகத்தில் இருந்து இந்த அளவீட்டுக்கு தொழில்நுட்ப உதவியும் கிட்டியது. கடந்த வருடத்தில் இடம்பெற்ற எண்ணிறந்த சம்பவங்களுக்கு பதிலிறுப்பாக இலங்கையில் இடம்பெற்றிருக்கக்கூடிய பொதுசன அபிப்பிராயத்தில் மாற்றங்களைப் புரிந்து கொள்வதற்கு மேலதிகமாக, சமாதானத்திற்கான பொதுசன ஆதரவின் தன்மையின் பாரிய ஆழத்தை மதிப்பாராய்வதன் மூலம் KAPS Iஇல் கற்கப்பட்ட பாடங்களின் அனுகூலத்தை எடுப்பதை அளவீடு உத்தேசமாகக் கொண்டுள்ளது. குறிப்பிட்டுக் கூறுவதென்றால் பின்வருவன மூலம் கடந்த வருடத்தின் அளவீட்டை KAPS II விஸ்தரிக்கின்றது.

- இலங்கை வேறுபட்ட சமூகப் பிரிவுகளினால் முன்வைக்கப்பட்டுள்ள பாரியதும், அதிக பன்னிலையிலானதுமான சமாதான ஆலோசனைகளின் தொகுதியைப் பரிசீலித்தல்;
- மோதலுடன் தனிப்பட்ட அனுபவம் மீதான விஸ்தரிக்கப்பட்ட நோக்கு உட்பட சமாதானத்திற்கான பொதுசன ஆதரவின் மூலங்களையும். நிரந்தரமான சமாதான இணக்கத்துடன் அல்லது ஆயுத மோதலுக்கு மீளத் திரும்புதலுடன் இணைந்துள்ள ஆகுசெலவுகளினதும், அனுகூலங்களினதும் தனிப்பட்ட மனவுணர்வுகளையும் பாரிய ஆழத்தில் பரிசீலித்தல்;
- எல்.ரி.ரி.ஈ. மத்தியிலான பிளவு (அதாவது, புதிதாகத் தோன்றியுள்ள கருணா தரப்பு), மற்றும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையம் மீதான ஜுலை தற்கொலைக் குண்டுத் தாக்குதல் போன்ற சம்பவங்களுக்கான பொதுசன எதிர்விளைவின் மதிப்பீடொன்றை ஒன்றிணைத்தல்;
- நியாயமானதும், நிலையானதுமான சமானதானத்திற்கு அவசியமான விட்டுக்கொடுத்தல்களைக் தழுவுவதற்கு வேறுபட்ட இனத்துவக் குழுக்களிலிருந்து தனிப்பட்டவர்களை இசைவுறச் செய்வதற்கான நிலைமைகளை மதிப்பாராய்வதற்கு அதிக புது மாற்றத்திற்குரிய அளவீட்டு ஆராய்ச்சித் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

கொள்ளுப்பிட்டி குண்டுத் தாக்குதலையும், மட்டக்களப்பிலிருந்து கருணா புறப்பட்டுச் சென்றதையும் தொடர்ந்து, 2004 ஜுலை, ஓகஸ்டில் KAPS IIக்கான வெளிக்களப் பணி மேற்கொள்ளப்பட்டது. நாடுபூராவிலும் உள்ள 3,513 பதிலிறுப்பாளர்கள் நீளமான, கட்டமைக்கப்பட்ட கேள்விக்கொத்தைப் பயன்படுத்தி நேர்முகங்காண்பதன் மூலம் ஆய்வு செய்யப்பட்டனர்.

இலங்கையில் உள்ள 21 மாவட்டங்களில் உள்ள பதிலிறுப்பாளர்களை மாதிரி உள்ளடக்குகின்றது. அரசாங்கக் கட்டுப்பாட்டிலில்லாத அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள பகுதிகள் மட்டுமே விலக்கி வைக்கப்பட்டுள்ளன. கருத்தாழமிக்க பகுப்பாய்வுக்காக போதியளவு எண்ணிக்கைகளை உறுதிப்படுத்துமுகமாக சிறுபான்மை இனத்துவக் குழுக்கள் முறைமையானரீதியில் மாதிரியில் அதிகமாக விளங்குகின்றன. முற்றுமுழுதான மாதிரி 1,742 சிங்களவர்களையும், 749 தமிழர்களையும், மலையகத்தைச் சேர்ந்த 323 தமிழர்களையும், 699 முஸ்லிம்களையும் கொண்டுள்ளது. 3,513 தனிப்பட்டவர்களைக் கொண்ட தேசிய நிகழ்தகவு மாதிரியொன்றை உருவாக்குவதற்காக முழுமையாக நாட்டையும், வேறுபட்ட இனத்துவக் குழுக்களையும் பற்றி செல்லுபடியான அனுமானங்களைப் பெற்றுக் கொள்வதை அனுமதித்து இனத்துவக் குழுவினாலும், பிராந்தியத்தினாலும் பெறுமதி சேர்க்கப் பட்டுள்ளது.[1]

வடக்கிலும், கிழக்கிலும் உள்ள எல்.ரி.ரி.ஈ. கட்டுப்பாட்டிலான பகுதிகளில் அளவீடு மீதான கட்டுப்பாடுகள் நேர்முகங்காண்பதைத் தடுத்தது. அளவீட்டு முறைகள் மீதான மேலதிகமான விபரங்களைப் பின்னிணைப்பு ‘அ’ வழங்குகின்றது. ஆய்வில் பயன்படுத்திய கேள்விக்கொத்தின் பிரதி ஒன்றை பின்னிணைப்பு ‘ஆ’ வழங்குகின்றது. ¶

[1] பின்னிணைப்பு ‘அ’இல் குறித்து வைக்கப்பட்டுள்ளவாறு, “மலையகம்” எனப் பொதுவாகக் கருதப்படுகின்ற பகுதிகளில் (அதாவது கண்டி, நுவரெலியா, கேகாலை, பதுளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள்) வாழ்கின்ற தமிழ் பதிலிறுப்பாளர்களுக்கும், வேறு தமிழர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தை மாதிரிப்படுத்தல் திட்டம் வழங்குகின்றது. எனினும், பதிலிறுப்பாளர்கள் தம்மை “மலையகத் தமிழர்கள்” என்றோ அல்லது குடிசன மதிப்பீட்டு வகைப்படுத்தல்களின் பிரகாரம் “இலங்கையர்” அல்லது “இந்தியத்” தமிழர் என்றவாறு அவர்களின் மூதாதையர் வகைப்படுத்தப்படுவர் என்றோ நாம் நேரடியாக உறுதிப்படுத்தவில்லை. இருந்த போதிலும், சமர்ப்பணத்தை இலகுபடுத்துவதற்காக நாம் இக்குழுவினரை மலையகத் தமிழர் எனக் குறிப்பிட்டுள்ளோம்.




# நிறைவேற்றுச் சாராம்சம்

சோஷல் இன்டிகேட்டரினால் நடத்தப்பட்ட இலங்கையின் சமாதான நடைமுறை மீதான இரண்டாவது அறிவு, மனோநிலை, மற்றும் அப்பியாசங்கள் அளவீட்டின் (Knowledge, Attitudes and Practices Survey - KAPS II) முடிவுகளை இவ்வறிக்கை ஆவணப்படுத்துகின்றது. கொழும்பில் உள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்துள்ள கட்சி சார்பற்ற அளவீட்டு ஆராய்ச்சி நிலையமாக சோஷல் இன்டிகேட்டர் விளங்குகின்றது. இவ்வளவீடு 2004 கோடை காலத்தில் நடத்தப்பட்டதுடன், 130க்கு மேற்பட்ட நாடுகளில் உதவித் திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் இலாப மற்ற தாபனமொன்றான கல்வி அபிவிருத்தி கழகத்தில் இருந்து தொழில்நுட்ப உதவியுடன், ஐக்கிய ராஜாங்க சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையிலிருந்து (USAID) கிட்டிய உதவு தொகையினால் பகுதியளவில் ஆதரவளிக்கப்பட்டது. கடந்த வருடத்தின் எண்ணிறைந்த சம்பவங்களுக்கு பதிலிறுப்பதில் இலங்கையில் இடம்பெற்றிருக்கக்கூடிய பொதுசன அபிப்பிராயத்தில் மாற்றங்களை நிர்ணயிப்பதும், சமாதானத்திற்கு பொதுசன ஆதரவின் தன்மையை பாரிய ஆழத்தில் மதிப்பாராய்வதன் மூலம் 2003இல் KAPS I அளவீட்டில் கற்கப்பட்ட பாடங்களின் அனுகூலத்தை எடுப்பதுமே அளவீட்டின் குறிக்கோள்களாகும். குறிப்பிடத்தக்கரீதியில், பின்வருவனவற்றின் மூலம் கடந்த வருடத்தின் அளவீட்டை KAPS II விஸ்தரிக்கின்றது:

- இலங்கையின் சமூகத்தின் வேறுபட்ட பிரிவினரினால் பரிந்துரைக்கப்பட்ட சமாதான ஆலோசனைகளின் பாரியதும், அதிக பன்னிலையானதுமான தொகுதியொன்றைப் பரிசீலித்தல்;
- மோதலுடன் தனிப்பட்ட அனுபவம் மீதான விஸ்தரிக்கப்பட்ட நோக்கு, குறிப்பான ஆகுசெலவுகளின் தனிப்பட்டவர்களின் மனவுணர்வுகள், மற்றும் நிரந்தர சமாதான இணக்கத்துடன் இணைந்துள்ள அனுகூலங்கள் அல்லது ஆயுத மோதலுக்கு திரும்புதல் ஆகியன உட்பட சமாதானத்திற்கான பொதுசன ஆதரவின் மூலங்களை அதிக


பன்னிலையிலான சமாதான ஆலோசனைகளின் சாத்தியங்களை வலியுறுத்துவதன் மூலம் சமாதானத்திற்கான ஆதரவை மேம்படுத்த முடியும். இதன் மூலம், வளைந்து கொடுக்கக்கூடிய ஆதாயங்கள் வெற்றியீட்டப்பட வேண்டும் என்பதற்கு பிரஜைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

**இனத்துவத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட புதிய ஆலோசனைகளின் எண்ணிக்கை**




(C) Copyright -Social Indicator - December 2004

## புதிய சமாதான எதிர்ப்புத்தன்மை





ஆழமாகச் சோதித்தல்;

■ எல்.ரி.ரி.ஈ.க்கு மத்தியிலான பிளவு (அதாவது, புதிதாகத் தோன்றியுள்ள கருணா அணி) மற்றும் கொழும்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஜுலையில் இடம்பெற்ற தற்கொலைதாரியின் குண்டு வெடிப்பு போன்ற சம்பவங்களுக்கு பொதுசனத் தாக்கம் பற்றிய மதிப்பீடொன்றை உள்ளடக்குதல்.

■ நியாயமானதும், இறுதியானதுமான சமாதானமொன்றுக்கு அவசியமான இணக்கப்பாடுகளைத் தழுவிக் கொள்வதற்கு வேறுபட்ட இனக் குழுக்களைச் சேர்ந்த தனிப்பட்டவர்களை நம்பச் செய்வதற்கான நிலைமைகளை மதிப்பாராய்வதற்கு அளவீட்டு ஆராய்ச்சித் தொழில்நுட்பங்களில் மிகவும் கிட்டிய புதுப்பித்தல்களைப் பயன்படுத்தல்.

¶ இலங்கையின் பொதுசன அபிப்பிராயமானது நியாயமற்றது என தனிப்பட்டவர்கள் நம்புகின்றவாறு சமாதான உடன்படிக்கையொன்று அடையப்பட்டால், அதற்கு எதிர்ப்பைக்


## இலங்கையின் சமாதான வகைகள் 2004 (புதிய ஆலோசனைகள்)





(C) Copyright -Social Indicator - December 2004

## பத்துத் துறைகளில் தேசிய எதிர் பிராந்திய அரசாங்க அதிகாரங்களின்




**காட்டுவதற்கு பொதுமக்கள் மத்தியில் இணக்கம் உள்ள போதிலும், 2003 அளவீட்டிலிருந்து ஒரு தொகையிலான குறிப்பான சமாதான ஆலோசனைகளுக்கு பொதுவாக இலங்கை மக்களிடமிருந்து பெருமளவு ஆதரவு கிட்டியுள்ளதாக ஆய்வின் முடிவுகள் கருத்து வெளியிடுகின்றன (அத்தியாயங்கள் II மற்றும் III-அ). மேலும், பதிலிறுப்பாளர்களுக்கு நாம் சமர்ப்பித்த எட்டு குறிப்பான ஆலோசனைகளில் ஐந்தை ஏற்றுக்கொள்வது தொடர்பில் சகல இலங்கை இனக் குழுக்களின் பெரும்பான்மையினர் மத்தியில் ஒற்றுமையுள்ளது. அவை:**

■ KAP I மற்றும் II ஆகிய இரண்டிலும் உள்ளடக்கப்பட்டுள்ள சமாதான ஆலோசனைகளுக்கான (சமஷ்டி, சமச்சீரற்ற சமஷ்டி, பாராளுமன்றத்தில் உத்தரவாத மளிக்கப்பட்ட சிறுபான்மைப் பிரதிநிதித்துவம், மற்றும் சிவிலியன்களுக்கு எதிரான யுத்த வன்முறைக்கான மன்னிப்பு) ஆதரவு 2003ஆம் ஆண்டை விட 2004இல் உயர்வானதாகும். இதில் மன்னிப்பு என்ற விடயம் மாற்ற மடையாமல் அதே அளவில் தொடர்ந்து மிருக்கின்றது.


■ 2003ஐ விட 2004இல் சமாதான த்திற்கான எதிர்ப்பின் சாத்தியம் கணிசமானளவு உயர்வானதாகும். இன்று 60%க்கு மேற்பட்ட பிரஜைகள் நியாயமற்ற அல்லது உபயோனமற்ற உடன்படிக்கை ஒன்றை எதிர்ப்பதற்கு இணக்கத்தினை வெளிப்படுத்துகின்றனர். அத்துடன் இத்தகையதொரு உடன்படிக்கையைத் தோற்கடிப்பதற்கு அவசியப்பட்டால் வன்முறை உபயோகிக்கப்படுவதை சுமார் 40%இனர் அங்கீகரிக்கின்றனர்.

■ KAPS IIஇல் உள்ள பெருமளவு சமாதான ஆலோசனைகளையும் (மோதலின் ஒவ்வொரு வேறுபட்ட தரப்புக்களினாலும் பரிந்துரைக்கப்பட்ட ஆலோசனைகள் உட்பட), உண்மையில், நாட்டில் உள்ள ஒவ்வொரு இனக் குழுவின் பெரும்பான்மையினரும் பின்வருவன உட்பட பன்னிலையிலான ஒழுங்குபடுத்தப்பட்ட ஆலோசனைகளையும் ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.


- இடம்பெயர்ந்த முஸ்லிம்களுக்கு வீடுகளையும், காணிகளையும் மீளளித்தல்.
- வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிரந்தரமாக இணைப்பு
- எல்.ரி.ரி.ஈ.இன் கனரக ஆயுதங்களைக் களைதல்
- மனித உரிமைகளைக் கண்காணிப்ப தற்கும், நிறைவேற்றுவதற்கும் பாகுபாடற்ற தொரு ஆணைக்குழுவைத் தாபித்தல்.

(C) Copyright -Social Indicator - December 2004


## இனத்துவத்தினால் புதிய சமாதான ஆலோசனைகளின் ஏற்றுக்கொள்ளல்




## இனத்துவத்தினால் இலங்கையில் சமாதான வகைகள்



## அரசியல் சக்தியினால் இலங்கையின் சமாதான வகைகள்




- சமாதான நடைமுறையின் அங்கமாக, விரிவான அரசியலமைப்புச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுதல்.

¶ **தீவிரப்போக்கிலான சமாதான ஆதரவாளர்களும், எதிராளிகளும் மற்றும் சாத்வீகமான சமாதான ஆதரவாளர்களும், எதிராளிகளும் என்றவாறு நான்கு வகையிலான சமாதான மாதிரி முறைகளை முன் வைப்பதற்கு நியாயமற்ற உடன்படிக்கை முடிவுகளை எடுப்பதற்காக தனிப்பட்டவர் களின் இணக்கத்துடன் சமாதான ஆலோசனைகளுக்கான ஆதரவை KAPS Iஇல் செய்தது போன்று நாம் இணைத்திருந்தோம். (அத்தியாயம் II மற்றும் III-அ):**

- கடந்த வருடத்தை விட தீவிரப் போக்கிலான சமாதான நடைமுறை ஆதரவாளர்களின் எண்ணிக்கை கணிச மானளவு அதிகரித்துள்ளது. இருந்த போதிலும், சமாதான நடைமுறையின் தீவிரபோக்கிலான எதிராளிகள் சிறியதொரு சதவீதத்தினால் அதிகரித்துள்ளனர்.

- ஆண்டின் போது சமாதான நடைமுறையின் சாத்வீகமான ஆதரவாளர் களும், சாத்வீகமான எதிராளிகளும் வீழ்ச்சியடைந்துள்ளனர். இது சமாதான ஆதரவாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள போதிலும், கடந்த வருடத்தை விட அரசியல்ரீதியில் அதிகளவு மாற்றமடைந்து ள்ளதைக் காட்டுகின்றது.

- ஏனைய தமிழர்களையும், முஸ்லிம்களையும் விட மலையகத் தமிழர்கள் ஓரளவுக்கு அதிகளவு சாத்வீகமான விளங்குகின்ற போதிலும், சமாதானத்தின் தீவிரபோக்கிலான ஆதரவாளர்களினால் சிறுபான்மை இனக் குழுக்கள் ஆதிக்கம் செலுத்தப்படுகின்றனர்.

- நான்கு சமாதான வகைகள் குறித்து சிங்கள இனக் குழு உறுப்பினர்கள் சார்புரீதியில் சம அளவில் பிளவுபட்டுள்ளனர். சில வேளைகளில் சித்தரிக்கப்பட்டுள்ளவாறு இணக்கப்பாட்டிலான சமாதானத்தின் ஒரே சீரானதன்மையிலான எதிராளிகளாக இருப்பதிலிருந்து தூரவிலகியுள்ளனர்.

- இணக்கத்திலான சமாதான உடன்படிக்கைக்கான ஆதரவு வடக்கிலும், கிழக்கிலும் பலம்வாய்ந்தது என்பதுடன், இது மத்திய மாகாணத்தில் குறைந்த அளவுக்கே பலம்வாய்ந்தது.

- வட மத்திய மாகாணத்தில் இணக்கமான சமாதானத்திற்கான எதிர்ப்பு பலமானது. இதற்கு அடுத்த இடத்தில் மூன்று தென் மாகாணங்கள் உள்ளன. பெருமளவு விரோதத் தன்மையிலான இப்பகுதிகளில் கூட பலதரப்பட்ட சமாதான ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வதற்கு பாரியளவிலான சிறுபான்மையினர் உள்ளனர்.

(C) Copyright -Social Indicator - December 2004

¶ பால்நிலை, வயது, கல்வி, மற்றும் நகர/கிராமிய வதிவிடம்; இன அடையாளம் காட்டலின் தீவிரத் தன்மை, ஏனைய இனக் குழு உறுப்பினர்களுடன் ஒருவருடன் மற்றொருவர் செயற்படும் அளவு; ஜனநாயகத்திற்கான ஆதரவு உட்பட அரசியல் பெறுமதிகள்; அரசியல் அறிவு, மற்றும் அதில் ஈடுபடுதல்; அரசியல் செயற்றிறனின் மனவுணர்வுகள் மற்றும் நம்பிக்கை; யுத்தத்தின் தனிப்பட்ட தாக்கம், யுத்தத்தின் காரணங்களின் மனவுணர்வுகள், யுத்தத்தினதும், சமாதானத்தினதும் ஆகுசெலவுகள் மற்றும் அனுகூலங்கள் ஆகியன உட்பட தனிப்பட்டவரின் சமூக நிலை தொடர்பில் ஒரு தொடரிலான காரணிகளை சமாதானத்தை நோக்கிய பொதுமக்கள் அபிப்பிராயத்தின் மூலங்களை நாம் மேலும் பரிசீலித்தோம். இப்பகுப்பாய்வுகள் பின்வருவன வற்றைக் காட்டின (அத்தியாயம் III- ஆ):

- சமாதான உடன்படிக்கைக்கு உயர்வான முறைமையான கல்வியைக் கொண்ட பிரஜைகளின் இணக்கம் பெரிதும் குறிப்பிடத்தக்களவில் உயர்வாக விளங்கியது. எனினும், ஏனைய குடித்தொகையியல் வேறுபாடுகள் சமாதான நடைமுறைக்கான ஆதரவு மீது பலவீனமான தாக்கங்களைக் கொண்டுள்ளன.


- இணக்கப்பாட்டிலான சமாதான உடன்படிக்கையொன்றுக்கு உயர்வான முறைமையான கல்வியைக் கொண்டுள்ள பிரஜைகள் குறிப்பிடத்தக்களவில் அதிகமாக ஆதரவளிப்பார்கள். எனினும், ஏனைய குடித்தொகையியல் வேறுபாடுகள் சமாதான நடைமுறைக்கான ஆதரவு மீது பலவீனமான தாக்கங்களையே கொண்டிருக்கும்.

- பலமான இன மற்றும் தேசிய அடையாளங்களையும், உயர்வான சமயப்பற்றினையும் கொண்டுள்ள இலங்கையர்கள் இணக்கத்திலான சமாதான உடன்படிக்கையொன்றுக்கு மிதமான நிலையிலிருந்து, பலமான நிலை வரையில் ஆதரவளிப்பார்கள் என்பதுடன், உயர்வான சமாதான எதிர்ப்புச் சாத்தியத்தை பெரிதும் பலம் பொருந்தியதாகக் கொண்டிருப்பார்கள்.

- ஏனைய இனத்துவ குழுக்களின் உறுப்பினர்களுடன் இலங்கையர்களின் அறிவினதும், தொடர்பினதும் அளவு இணக்கமான சமாதான உடன்படிக்கையொன்றுக்கான அவர்களது ஆதரவுடன் பலமான தொடர்பினைக் கொண்டுள்ளது.


- ஜனநாயகமொன்றாக இலங்கையை பேணுவதில் மிகவும் ஆதரவாக விளங்கும் இலங்கையர்கள் விசேடமாக, பலமான ஜனநாயகப் பெறுமதிகளைக் கொண்டவர்கள் இணக்கமான சமாதானமொன்றுக்கு ஆதரவளிப்பதற்கும், உயர்வான எதிர்ப்புச் சாத்தியத்தை வெளிப்படுத்துவதற்கும் அவர்கள் அனேகமாக விளங்குவார்கள்.

## பால்நிலை, வயது, கல்வித் தகைமை, மொத்த மாதாந்த வருமானம், நகரம்/கிராமம் ஆகியவற்றினால் இலங்கையின் சமாதான வகைகள்




 (C) Copyright -Social Indicator - December 2004

## சமஷ்டித் தீர்வுக்கு ஆரம்பத்தில் எதிர்த்த தனிப்பட்டவர்கள் மீதான எதிர்வாதங்களின் தாக்கங்கள்




- இன்று சமாதான நடைமுறையில் பொதுமக்களின் அறிவு குறிப்பிடத்தக்களவில் உயர்வானது என்பதுடன், சமாதான நடைமுறையின் பாரியளவு அறிவைக் கொண்டிருப்பவர்கள் பரந்தஅளவிலான சமாதான ஆலோசனைகளுக்கு அனேகமாக ஆதரவளிக்கக்கூடியவர்களாக விளங்குவார்கள். நியாயமற்ற சமாதான ஆலோசனை ஒன்றுக்கு எதிராக, அல்லது சமாதான நடைமுறையைக் குழப்பும் என்ற மன உணர்வினைக் கொண்டுள்ள அரசியல் கட்சிக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிப்பவர்களாக அவர்கள் அனேகமாக விளங்குவார்கள்.

- அரசியல் அக்கறை சமாதான நடைமுறைகளுக்கான ஆதரவுடன் நிச்சயமான தொடர்பினைக் கொண்டுள்ளது. ஆனால், மரபுரீதியான அரசியல் செயற்பாடுகளில் (வாக்களித்தல், கட்சிப் பணி) பங்கெடுப்பில் அல்ல.

- பாராளுமன்றம், இராணுவம் மற்றும் பொலிஸ் போன்ற நாட்டின் அரசியல் நிறுவனங்களில் உயர்வான நம்பிக்கையைக் கொண்டுள்ள இலங்கையர்கள், சமாதான உடன்படிக்கையொன்றின் அதிகளவு மிதவாதத்தன்மையான ஆதரவாளர்களாக விளங்குகின்றார்கள்.

- ஜனாதிபதியை அதிகளவு நம்பும் இலங்கையர்கள், இணக்கமான சமாதான உடன்பாட்டுக்கு அவர்களது எதிர்ப்பு அதிகளவு சாத்வீகமானதாக விளங்கும் என்ற போதிலும், பெரிதும் எதிர்ப்பையே தெரிவிப்பார்கள்.


- யுத்தத்தின் விளைவாக, குடும்பத்தவர்கள், நண்பர்கள், அயலவர்கள் துன்பப்படுவதைப் பெரிதும் நேரடியாக அவதானித்ததினால், பார்த்ததினால் பாதிப்படைந்த இலங்கையர்களும் இணக்கமான சமாதான உடன்படிக்கைக்கு அனேகமாக பெரிதுமே ஆதரவளிப்பார்கள். அவர்கள் உயர்வான சமாதான எதிர்ப்புச் சாத்தியத்தையும் வெளிப்படுத்துவார்கள்.

- யுத்தத்தின் விளைவாக பெரிதுமே சகல தமிழர்களும், முஸ்லிம்களும் நேரடியாக பாதிப்படைந்துள்ள அதேவேளை, விசேடமாக தென் மாகாணத்தில் உள்ள கணிசமானளவு சிங்கள சிறுபான்மையினர் மோதலுடன் நேரடி அனுபவத்தைச் சிறிதளவேனும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், இதன் விளைவாக இணக்கமான சமாதான உடன்படிக்கையொன்றுக்கு குறைந்தளவு ஆதரவாகவே விளங்குகின்றனர்.

- சகல இனக் குழுக்களையும் சேர்ந்த பாரிய பெரும்பான்மையிலான பிரஜைகள் நாட்டின் சகல பகுதிகளுக்கு முக்கியமான புதிய அனுபவங்களை நிரந்தரமான சமாதான உடன்படிக்கை யொன்று கொண்டுவரும் என்றும், யுத்தத்திற்கு மீளத் திரும்புவது அழிவைக் கொண்டுவரும் என்றும் நம்புகின்றனர்.

- தமக்கும், நாட்டுக்கும் மேலதிக அனுகூலங்களை நிரந்தரமான சமாதானம் கொண்டு வரும் என நம்பும் இலங்கையர்கள் இணக்கமான சமாதானமொன்றுக்கு அதிகளவு ஆதரவாக விளங்குகின்றார்கள். இதை விட

## மூன்று பாரிய இனத்துவங்களினால் சமஷ்டித் தீர்வுக்கு ஆரம்பத்தில் எதிர்த்த தனிப்பட்டவர்கள் மீதான எதிர்வாதங்களின் தாக்கங்கள்




குறைந்தளவாக விளங்குகின்ற போதிலும், யுத்தத்திற்கு மீளத் திரும்புவது பெரிய செலவினங்களைச் சுமத்தும் என நினைப்பவர்களுக்கும் இது உண்மையான தாகும்.

¶ **சமாதானத்தை இன்னும் கூட ஏற்றுக்கொள்வதற்கு இலங்கையர்களை நம்பச் செய்யும் சாத்தியத்தை விசாரித்தறிவதற்கான பரிசோதனை ரீதியிலான அளவீட்டு முறைகளின் உபயோகமே KAPS IIஇன் புதுமாற்றத்திலான அம்சமொன்றாகும். முழு அளவில், தன்வயப்படுத்தக்கூடிய தொழில்நுட்பங்களின் இணைப் பொன்றின் ஊடாக, சமாதானத்திற்கான இலங்கையின் மனோநிலைகளை உருவமைப்பதற்கான சாத்தியத்தை இப்பகுப்பாய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. திட்டமாக, இப்பகுப்பாய்வுகள் பின்வருவனவற்றைக் காட்டுகின்றன (அத்தியாயம் IV):**

■ தனித்த "கட்டை" ஒன்றுக்குள் மோதலில் உள்ள வேறுபட்ட தரப்புக்களினால் ஆதரிக்கப்படுகின்ற சமாதான ஆலோசனைகளை இணைக்கும் ஒன்றே சக்திவாய்ந்த தன்வயப்படுத்தக்கூடிய தொழில்நுட்பமொன்றாகும். சமாதானததின் காரணமாக வடக்கிலும், கிழக்கிலும் உள்ள உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுவது போன்ற பிரச்சித்தமற்ற ஆலோசனையொன்றை ஏற்றுக்கொள்ளுமாறு பெரும்பான்மையான பிரஜைகளை நம்பச் செய்வதற்காக எல்.ரி.ரி.ஈ.இன் கனரக ஆயுதங்களைக் களைவது போன்ற பிரசித்தமான ஆலோசனை ஒன்றை ஒன்றிணைத்தல். நம்பச் செய்யப்பட்டவர்களுள் கணிசமான அளவு சிங்கள பதிலிறுப்பாளர்களும் உள்ளடங்குகின்றனர். இவர்களுக்கு உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது புறம்பாக கருத்திற்கு எடுக்கப்படும் போது, ஆழமான வகையில் பிரச்சித்தமற்றமாகும்.

■ பொதியில் குறைந்தளவு சார்பிலான ஆலோசனைக்கு பொதுமக்களின் ஆதரவில் சில சாதகமான மாற்றத்தினை பெரிதும் எப்பொழுதுமே மூட்டைகள் முன்வைக்கும் அதேவேளை, எல்.ரி.ரி.ஈ. இடைக்கால சுயாட்சி அதிகாரசபையொன்றை உருவாக்குவதை நோக்காகக் கொண்ட ஆலோசனைகளை எல்.ரி.ரி.ஈ.இன் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளவதில் மாற்றம் பொதுவாக மிதமானது என்பதுடன், பெரும்பான்மையானோர்

ஏற்றுக்கொள்வதை முன்வைப்பதற்கு போதுமானதல்ல.

■ மோதல் மீது வேறுபட்ட மன உணர்வுகளைத் தூண்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட பொதியை அல்லது சின்னங்களைப் பயன்படுத்தி, சமாதான ஆலோசனைகளின் கருத்துப்பரிமாறலை அல்லது "வடிவத்தை" இரண்டாவது தன்வயப்படுத்தல் தொழில்நுட்பம் சம்பந்தப்படுத்துவதுடன், ஆதலினால் குறிப்பான சமாதான ஆலோசனைகளைக் கரிசனைக்கு எடுக்கும் தனிப்பட்டவர்களின் வழிகளை மாற்றுகின்றது. எனினும், இனத்துவ மனக்குறைகளினதும், பொருளாதார ஆதாயத்தினதும் மொழியில் பொருள்படுத்தப் படும் வாதங்களுக்கு சிங்களவர்கள் ஓரளவுக்கு அதிகளவு சுலபமாக பாதிக்கப்படு பவர்களாக உள்ள போதிலும், வடிவமைத்தல் தாக்கங்கள் சார்புரீதியில் பலவீனமானவை என்பதுடன், வன்முறையை முடிவுக்கு கொண்டு வருவதை வலியுறுத்தும் வாதங்களுக்கு தமிழர்கள் ஓரளவுக்கு அதிகளவு பிரதிபலிப்பவர்களாக விளங்கு கின்றனர். KAPS IIஇல் பயன்படுத்தப்பட்ட வடிவங்கள் ஒன்றுமே முஸ்லிம்கள் மீது அதிகளவு தாக்கத்தைக் கொண்டிருக்க வில்லை.

■ பிரஜைகளின் அபிப்பிராயங்களை முயற்சித்து, மாற்றுவதற்கு "எதிர்-வாதங் களின்" உபயோகத்தை இறுதியான தன்வயப் படுத்தல் தொழில்நுட்பம் பயன்படுத்துகின்றது. உண்மையில், மோதலுக்கான சமஷ்டித் தீர்வொன்றுக்கான ஆதரவின் பிரச்சினை மீது பயன்படுத்தப்படும் எதிர்-வாதங்கள், சமஷ்டித் தீர்வொன்று பற்றிய தமது ஆரம்ப மனோ நிலைகளை மாற்றுவதற்கு இலங்கையர்களை வழிப்படுத்துவதில் மிகவும் செயற்றிறனானது எனத் தோன்றுகின்றது. சமஷ்டித் தீர்வொன்றுக்கு ஆரம்ப எதிராளிகளை வழிப்படுத்துவதை விட சமஷ்டியின் ஆரம்ப ஆதரவாளர்களை உதாசீனம் செய்வதில் எதிர்-வாதங்கள் அதிகம் செயற்றிறனானவை என்பது துரதிர்ஷ்வசமானதாகும். எனினும், இனத்துவ நியாயத்தினதும், சமஷ்டி அமைப்புக்களில் பிராந்திய சுயாட்சியினதும் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் சமய, கட்சித் தலைவர்களினால் தெளிவாக உச்சரிக்கப்பட்ட எதிர்-வாதங்கள் அதிக ஆதரவிலான நிலைகளை ஏற்றுக்கொள்வதற்கு ஆரம்பத்தில் எதிர்ப்புத் தெரிவித்த தனிப்பட்டவர்களை வழிப்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்க தகுதியைக் கொண்டிருந்தது.

■ அரசாங்க சார்பு பொறுப்பின் பெருமளவு துறைகளில் பிராந்திய அதிகாரங்களுக்கு குறிப்பிடத்தக்க ஆதரவு உள்ள போதிலும், பொதுவாகவே சமஷ்டி மீது பொதுமக்கள் கருத்து கலப்பிலானது. பதிலிறுப்பாளர்களுக்கு அரசாங்கத்திலான பத்து அதிகாரங்களின் பட்டியலொன்றை நாம் சமர்ப்பித்ததுடன், ஐந்து துறைகளில் (போக்குவரத்து, கலாசாரம், சமயம், கமத்தொழில் மற்றும் மீன்பிடித்தொழில், கல்வி மற்றும் மூலவளங்கள்) பிராந்திய அரசாங்கங்கள் சமஅளவிலான அதிகாரத்தை யாவது கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு தெளிவான ஒருமைப்பாடு இருந்தது.

■ எனினும், ஐந்து வேறு துறைகளில் (இராணுவம் மற்றும் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, பொலிஸ், நீதித்துறை, மற்றும் பொருளாதாரங்கள் மற்றும் வரிவிதிப்பு) கருத்துக்கள் மிகவும் தெளிவான முறையில் பிரதிபலித்தன. இதன்படி தமிழர்கள் அதிகளவு பிராந்தியப் பங்குக்கு சார்பாக விளங்க, சிங்களவர்களும், முஸ்லிம்களும் பாரிய தேசிய அதிகாரத்திற்குச் சார்பாகவுள்ளனர். எனினும், கஷ்டமான துறைகளில் கூட இணக்கப்பாட்டிலான தீர்வு சாத்தியமானது என்பதைச் சுட்டிக்காட்டும் வகையில் இத் துறைகளில் தமிழர் கருத்து சமநிலையிலான தொரு பங்கினையாவது வகிப்பதற்கு தேசிய அரசாங்கத்தை அனுமதிக்கின்றது.

¶ **இம்முடிவுகளின் அடிப்படை யில், இலங்கையின் சமாதான நடை முறையை மேம்படுத்துவதற்கு பொதுசன தகவல் இயக்கங்களுக்கான பின்வரும் சிபார்சுகளை நாம் செய்கின்றோம் (அத்தியாயம் V):**

■ இனத்துவத்தின் பின்னர், சமாதான நடைமுறைபற்றி அறிவை எடுத்துக் கொள்ளும் போது, பலதரப்பட்ட சமாதான ஆலேசானை களுக்கான ஆதரவை நிர்ணயிப்பதில் தனித்த மிகவும் முக்கியமான காரணியாக, சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினைகள் பற்றி தனிப்பட்டவர்களுக்கு அறிவிப்பதில் மட்டுமன்றி, ஆனால், சமாதான ஆதரவின் பாரிய மட்டங்களை மேம்படுத்துவதில் பொதுசன தகவல் பிரச்சாரங்கள் உயர்வான செயற்றி னான ஆற்றலளவைக் கொண்டுள்ளன. இத்தகையதொரு பிரச்சாரம், சகல நான்கு இனத்துவக் குழுக்களிடையே பெரும்பான்மை யான ஏற்றுக்கொள்ளலுக்கான அவ்வாலோச னைகளை வலியுறுத்துவதன் மூலம் ஆரம்பிக்கப்பட முடியும்.

■ பன்னிலையிலான சமாதான ஆலோசனைகளின் சாத்தியங்களை வலியுறுத்துவதன் மூலம் சமாதானத்திற்கான ஆதரவு மேம்படுத்த முடியும். இதன் மூலம்,

(C) Copyright -Social Indicator - December 2004

மற்றவர்களுக்கு முக்கியமான பிரச்சினைகள் மீது அவர்களுக்கு சலுகைகளைச் செய்வதற்காக, பிரதியுபகாரமாக முக்கிய மானவை மீது வளைந்து கொடுக்கக்கூடிய ஆதாயங்கள் வெற்றியீட்டப்பட வேண்டும் என்பதற்காக பிரஜைகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.

■ வடிவமைப்பினதும், எதிர்-வாத தாக்கங்களினதும் மீது KAPS IIஇல் தகவலின் அனுகூலத்தை பொதுசன தகவல் பிரச்சாரமொன்று எடுக்க முடியும். இத்தாக்கங்கள் அளவீட்டில் மிதமாக உள்ள அதேவேளை, ஒருங்கிணைக்கப்பட்டதும், நிலைத்திருக்கத்தக்கதுமான பிரச்சாரமொன்றில் பயன்படுத்தப்படும் போது அவை அதிகளவு செயற்றிறனாக விளங்கும் என நம்புவதற்கு நல்ல காரணங்கள் உள்ளன. இதற்கு மேலதிகமாக, இம்முயற்சிகளுக்கு தமது அதிகாரங்களை வழங்குவதற்கு சமய மற்றும் கட்சி பிரமுகர்கள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் அத்தலைவர்களினால் தெளிவாக உச்சரிக்கப்பட்ட வாதங்கள் எமது அளவீட்டைச் சரிக்கட்டுவதில் பொதுசனக் கருத்தில் பெருமளவிலான மாற்றங்களுக்கு இட்டுச் சென்றுள்ளன.

■ ஏதோ அமைப்பிலான அதிகாரத்தைப் பங்கிடுதல் (அது சமஷ்டி, பரவலாக்கம், அல்லது சுய-அரசாங்கம் என அழைக்கப்பட்டாலும்), வெற்றிகரமான சமாதான உடன்படிக்கைக்கு சாத்தியமானளவில் அவசியமானதாகும். ஆனால், எண்ணிலடங்கா வழிகளில் சமஷ்டியை வடிவமைக்க முடியும். தேசிய பிராந்திய ஒத்துழைப்பின் பெறுமதியைப் பெரும்பான்மையான பொது மக்கள் ஏற்கனவே தழுவியுள்ள துறைகளில் அதிகாரத்தைப் பங்கிடுவதற்கான உத்தேசத்தை வலியுறுத்தலின் மூலம் இப்பிரச்சினை மீது பொதுசன கருத்தினை தயாரிப்பதற்கு பொதுசன தகவல் பிரச்சாரம் அவசியமானதாகும்.

■ சமாதான நடைமுறை மீது பொதுசன தகவல் பிரச்சாரம் பிரத்தியேகமான நோக்கினைக் கொண்டிருக்கக்கூடாது ஜனநாயகத்திற்கான ஆதரவு அதன் சொந்த உரிமையில் முக்கியமானதாகும். பலமான ஜனநாயகப் பெறுமதிகளுடனும், ஜனநாயக ஆட்சிக்கான உறுதியான கடப்பாட்டுடனுமான பிரஜைகள் சமாதானத்திற்கு அதிகளவு ஆதரவாக விளங்குகின்றார்கள். சமாதானத்திற்கு ஆதரவைக் கட்டியெழுப்புவதிலும், ஆனால், இலங்கையில் பலமான ஜனநாயக பிரஜைகளுக்கு கற்பித்தலிலும் தற்போதைய முயற்சிகளை கற்பித்தலிலும் தற்போதைய முயற்சிகளை விஸ்தரிப்பதிலும் உண்மையான பெறுமதி இருக்கும் என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது.

**¶ நீண்ட கால அடிப்படையில், இனத்துவக் குழுக்களுக்கு இடையில் ஒருவருடன் மற்றொருவர் தொடர்பினைக் கொள்வதையும், நம்பிக்கையையும், இரு மொழித் தேர்ச்சியையும் மேம் படுத்துவதற்கும், பொதுவாக, ஜனநாயகத்திற்கும் சமூக மோதல்களின் சமாதானத் தீர்வுக்கும் இடையிலான உறவு பற்றி இலங்கையர்களுக்கு கற்பிப்பதற்கும் அதிக தேவைகள் செய்யப்பட வேண்டியுள்ளது. தமக்கு மூத்தவர்களை விட சமாதானத்திற்கு ஏற்கனவே ஓரளவுக்கு அதிகமாகவே ஆதரவாக இலங்கையில் உள்ள இளம் சந்ததியினர் இருப்பது எமக்கு ஊக்கமளிப்பதாக இருக்கின்றது. அரசாங்கத்தினாலும், கட்சிகளினாலும், சிவில் சமூக குழுக்களினாலும் நகரத்திற்குரிய கல்வியில் நிலைத் திருத்தல் முயற்சிகளுடன் இணைந்து, இலங்கையின் நிலையான ஜனநாய கத்தினுள் நியாயமானதும், நிரந்தர மானதுமான சமாதானத்தின் குறிக் கோளை அடைவதற்கு நீண்ட காலம் எடுக்காது என்பது சாத்தியமாகும்.**


(C) Copyright -Social Indicator - December 2004



# விதந்துரைப்புகள்

இலங்கையில் சமாதானத்தின் எதிர்காலம் பற்றி பெரிதுமே திடநம்பிக்கையிலான மதிப்பீட்டுடன் KAPS 1க்கான இறுதி அறிக்கை முடித்துவைத்தது. யுத்த நிறுத்தம் தழுவியுள்ளதாகத் தோன்றுகின்றதாக சாட்சியத்தின் மீது அந்த திடநம்பிக்கை அடிப்படையைக் கொண்டிருந்ததுடன், மோதலுக்கான பெருமளவு தரப்புக்கள் நியாயமான பேச்சுவார்த்தையிலான நிலைமைகளை உருவாக்குவதாகத் தோன்றுகின்றது. நியாயமானதும், இறுதியானதுமான சமாதான உடன்படிக்கையை முடிப்பதற்கு அவசியப்படும் அம்சங்களின் பெரும்பாலானவற்றுக்கு பரந்தளவிலான பொதுசன ஆதரவு இருப்பதாக முதலாவது KAPS அளவீட்டின் முடிவுகள் கண்டறிந்தன. ஒரு வருடத்தின் பின்னர், சமாதான நடைமுறை பற்றிய ஆரம்ப திடநம்பிக்கைக்கான காரணங்களில் பெரும்பாலானவை மங்கிவிட்டன.

நிச்சயப்படுத்திக் கொள்ள கடந்த வருடத்திலிருந்து முடிவுகளை இரண்டாவது KAPS அளவீட்டிலிருந்து சான்று மீள் வலியுறுத்துவதுடன், நியாயமானதும், இறுதியுமானதுமான சமாதானத்தை சாதிப்பதற்காக எதிர்நோக்குகளை முன்னேற்று முகமாக, தனிப்பட்டரீதியில் ஆதரிக்காத ஒரு தொகை ஆலோசனைகள் உட்பட குறிப்பிடத் தக்களவிலான பரந்த வீச்செல்லையைக் கொண்ட சமாதான ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வதற்கு சகல இனத்துவக் குழுக்களையும், பிராந்தியங்களையும் சேர்ந்த கணிசமானளவு எண்ணிக்கையினர் உட்பட பெரும்பான்மையிலான பொதுமக்களின் இணக்கத்தினை ஆவணப்படுத்துகின்றது. உண்மையில், KAPS Iஇல் அறிவிக்கப்பட்டதை விட சமாதானத்தை நோக்கிய பொதுசன மனோநிலையின் மிக அதிகளவிலான நம்பிக்கையிலான பிரதிமையை KAPS II இலிருந்து சான்று வருணிக்கின்றது.

2003ஐ விட மிகவும் பலமாக 2004இல் சமாதானத்திற்கு பொதுமக்கள் அர்ப்பணிப்பைக் கொண்டிருப்பதாக KAPS IIஇலிருந்து சான்று எடுத்துக்காட்டுகின்றது. மேலும், நன்கு வடிவமைக்கப்பட்டதும், ஒருங்கிணைக்கப்பட்டதுமான பொதுசன தகவல் மற்றும் தூண்டுதல் திட்டமொன்றின் மூலம் இயல்பாகப் பலப்படுத்தப்பட்டால், சமாதானத்திற்கான பொதுமக்களின் ஆதரவு நீடிக்கப்படலாம் என்று அளவீட்டு முடிவுகள் சுட்டிச் சொல்கின்றன.

இருந்த போதிலும், நாட்டில் உள்ள தற்போதைய அரசியல் மற்றும் பாதுகாப்பு நிலைமையுடன் இணைந்த கடந்த வருடத்தின் நிகழ்வுகள் நிரந்தரமான சமாதான உடன்படிக்கையைச் சாதிப்பதற்கான எதிர்நோக்குகள் தொடர்பில் சவாலின் பரிமாணங்களை எடுத்துக்காட்டுகின்றன. எல்.ரி.ரி.ஈ.இன் இணக்கமற்ற போக்குடன் இணைந்துள்ள அரசாங்கத்தின் கூட்டணியினுள் நிலவும் பிளவுகள் கடந்த இரு வருடங்களில் ஏதாவது நேரத்தை விட அநேகமாக கருத்துள்ள பேச்சுவார்த்தையாக இடம்பெறச் செய்வது குறைவாகவே தோன்றுகின்றது. உயர்வாகவுள்ள அரசியல் வன்முறையை சூழ்நிலை மோசமாக்கியுள்ளது. பேச்சுவார்த்தை நடத்தும் பங்காளிகளாக அவர்களது நம்பகத்தன்மையிலும், நம்பிக்கைக்கான பாத்திரத்தன்மையிலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக, ஏனைய தரப்புக்கு எதிராக "அரசியல் புள்ளிகளைக் கூட்டிக் கொள்வதற்காக" மோதலுக்கான சகல தரப்புக்களினதும் தோற்றமான அக்கறை யுத்த நிறுத்தத்தின் ஸ்திரத்தன்மைக்கு பயமுறுத்தலை ஏற்படுத்தும் பதில் குற்றச்சாட்டையும், கெட்ட எண்ணத்தையும், கொண்ட துன்மார்க்கமான சுற்றொன்றை உருவாக்குவதுடன், சிவில் யுத்தத்திற்கு மீளத்திரும்புதலைக் கட்டியங் கூறுகின்றது. துரதிர்ஷ்டவசமாக, இலங்கையின் அரசியல் தலைவர்களிடமிருந்து முனையப்பட்டுள்ள சமாதான ஆலோசனைகளைப் பூர்த்தி செய்தல் பொதுவாக பொதுசனத்தின் மத்தியில், கண்கூடான சமாதானத்திற்கான கிராக்கிக்கு மிகவும் குறைவாக விளங்குகின்றது.

அப்படியெனில், என்ன செய்ய முடியும்? இலங்கையில் சமாதான நடைமுறைக்கு பொதுசன ஆதரவை மீள் வலியுறுத்துவதற்கும், அகலமாக்குவதற்கும் ஒரு தொடரிலான குறுகிய கால மற்றும், நீண்ட கால விதந்துரைப்புகளுடன் KAPS I இறுதி அறிக்கை முடிக்கப்பட்டது. பன்னிலையிலான மொழி மூலங்களைப் பயன்படுத்தி

(C) Copyright -Social Indicator - December 2004

பொதுசன தகவல் இயக்கத்தைத் தாபித்தல், பொதுமக்களின் அறிவை அதிகரித்தல், (குறிப்பாக தொலைக்காட்சி), சமாதான நடைமுறைகளின் முழுமையான சாராம்சத்தினதும், பிரச்சினையில் உள்ள குறிப்பான ஆலோசனைகளினதும் புரிந்துணர்வை அதிகரித்தல் ஆகியனவே உள்ளடக்கப்பட்டுள்ள குறுகிய கால விதந்துரைப்புகளாகும். அவர்களது இணை வேண்டுகோளை உச்சப்படுத்துவதற்கு முரண்பாட்டிலான ஆலோசனைகளைக் கட்டுதல் மீது சில தற்காலிகமான கருத்துக்களையும், சமாதானத்திற்கான ஆகக் கூடுதலான தூண்டுதலையும் சாதிப்பதற்கு வேறுபட்ட குழுக்களுக்கு சமாதான நடைமுறையை எவ்வாறு வடிவமைப்பது என்பது மீதான சில பூர்வாங்க கருத்துக்களையும் உச்சப்படுத்துவதற்கும் இது முன்கொண்டுவந்தது. KAPS Iஇன் நீண்ட கால விதந்துரைப்புகள், இலங்கையில் இனத்துவப் பிளவை நிரப்புவதற்கு உதவக் கூடிய நடவடிக்கைகளை வலியுறுத்து வதையும், பல்-மொழியிலான கல்விக்கு ஊக்கமளிப்புகள் மூலமும், தேசிய சின்னங்களையும், தேசிய, கட்சி சார்பற்ற, இனத்துவம் சாராத ஊடகம் போன்ற நிறுவனங்களையும் ஊக்குவிப்பதன் மூலமும் பாரிய இனத்துவ ஒன்றிணைப்பினை மேம்படுத்துவதையும், சமூகத்தின் 'இருப்பவர்களுக்கும்', 'இல்லாதவர்களுக்கும்' இடையிலான பொருளாதார இடைவெளியை குறைப்பதையும் வலியுறுத்தின. இடையிலான ஆண்டில், குறுகிய கால விதந்துரைப்புகளின் சிலவற்றின் அமுலாக்கத்தில், சில முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. ஆனால், முயற்சிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள துடன், அவை துண்டு அடிப்படையிலானது மாகும். பலமானதும், ஒருங்கிணைந்ததுமான பொதுசன தகவல் இயக்கத்தை ஒத்திருக்கும் எதுவுமே கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இல்லை.

மேலும், 2004இன் தேர்தல் பிரச்சாரம், அ.சா.தாபனங்களினதும், ஏனைய தரப்புக்க ளினதும் சமாதான முயற்சிகளுக்கு உதவி யளிப்பதை விட விவாதிக்கத்தக்கதாக, கெடுதலை ஏற்படுத்துகின்ற பாரிய பகிரங்கமான தவறான தகவலை வழங்கும் பிரச்சாரமாக விளங்கியது.

கடந்த வருடத்தின் விதந்துரைப்புகளை KAPS IIஇலிருந்து சான்று பலமாக மீள்வலியுறுத்துவதுடன், வேறு பலவற்றையும் சுட்டிச் சொல்கின்றது.

- இவ்வருடத்தின் சமாதான நடைமுறை பற்றிய பகிரங்கமான தகவலின் மிகவும் திருந்திய நடவடிக்கையானது இனத்துவத்திற்கு அடுத்ததாகவே நடைமுறை பற்றிய அறிவை உறுதிப்படுத்துகின்றது. இதுவே அந் நடைமுறைக்கான ஆதரவின் தனித்த பலமான எதிர்வுகூறலாகும். சமாதான மனோநிலைகள் மீதான அதிக அடக்க மானதும், உறுதிமிக்கதுமான தாக்கங்களை பொதுவான அரசியல் அறிவும், உயர்வான முறைமையான கல்வியும் கொண்டுள்ளன என்ற மேலதிகச் சான்றானது இந்தக் காரணத்தை மேலும் பலப்படுத்துகின்றது.

- பொதுசன தகவல் பிரச்சாரம் ஒன்றை வடிவமைப்பதில், பன்னிலையிலான சமாதான ஆலோசனைளைக் கட்டுவதன் மூலமும், இதன் மூலம் ஏனையவை மீது சலுகைகளைச் செய்வதற்குப் பதிலாக முக்கியமான பிரச்சினைகள் மீது வெற்றியீட்டுவதற்கு சாத்தியமான ஆதாயங்கள் உள்ள பிரஜைகளைக் காட்டியும் சமாதானத்திற்கான ஆதரவை மேம்படுத்த முடியும் என KAPS II சுட்டிச் சொல்கின்றது.

- சகல நான்கு இனத்துவக் குழுக்களின் மத்தியில், பெரும்பான்மை யிலான ஏற்றுக்கொள்ளலுக்கான ஆலோசனை களை வலியுறுத்துவதன் மூலம் பொதுசன தகவல் பிரச்சாரத்தை ஆரம்பிக்க முடியும்.

- உருவாக்குதல் மற்றும் எதிர்வாத தாக்கங்கள் மீது KAPS 2இல் தகவலின் அனுகூலத்தையும் பொதுசன தகவல் பிரச்சாரம் எடுக்க முடியும். அளவிட்டில் இத் தாக்கங்கள் மிதமாக உள்ள அதேவேளை, ஒருங்கிணைக்கப்பட்டதும், நிலைத்திருக்கத் தக்கதுமான பொதுசன தகவல் பிரச்சாரத்தில் பயன்படுத்தப்படும் போது அவை அதிக செயற்றிறனாக இருக்க முடியும் என நம்புவதற்கு நல்ல காரணங்கள் உள்ளன. இதற்கு மேலதிகமாக, எமது அளவீட்டு அனுபவங்களில் பொதுசனக் கருத்தில் அளப்பரிய மாற்றங்களுக்கு சமய மற்றும் கட்சி உயர் பீடத்தினரினால் தெளிவாக உச்சரிக்கப்பட்ட வாதங்கள் இட்டுச் சென்றுள்ளதனால் இம் முயற்சிகளுக்கு தமது அதிகாரத்தை வழங்குவதற்கு இத்தலைவர் களை ஊக்கப்படுத்துவது அவசியமானதாகும்.

- வெற்றிகரமான சமாதான உடன்படிக்கைக்கு சமஷ்டி, பரவலாக்கம் அல்லது சுய-அரசாங்கம் என அழைக்கப் பட்டாலும் ஏதாவது வகையிலான அமைப்பில் அதிகாரத்தைப் பங்கிடுதல் அவசியமான தாகும். சமஷ்டியை எண்ணிலடங்கா வழிகளில் வடிவமைக்க முடியும். தேசிய-பிராந்திய ஒத்துழைப்பின் பெறுமதியை ஏற்கனவே தழுவியுள்ள பெரும்பான்மை யிலான பொதுமக்கள் உள்ள துறைகளில்


(C) Copyright -Social Indicator - December 2004

அதிகாரத்தைப் பங்கிடுதலுக்கான தூர நோக்கினை வலியுறுத்துவதன் மூலம் இப்பிரச்சினை மீதான கருத்தினை பொதுசன தகவல் பிரச்சாரம் தயாரிப்பது அவசியமாகும்.

■ சமாதான நடைமுறை மீது பொதுசன தகவல் பிரச்சாரம் பிரத்தியேகமாக நோக்கினைக் கொண்டிருப்பது அவசியமான தாகும். ஜனநாயகத்திற்கான ஆதரவு அதன் சொந்த உரிமையில் முக்கியமானதாகும். மிகப் பலமான ஜனநாயகப் பெறுமதிகளும், ஜனநாயக ஆட்சிக்கான உறுதியான அர்ப்பணிப்பும் சமாதானத்திற்கு மிக அதிகளவிலான ஆதரவை வழங்குகின்றது. சமாதானத்திற்கான ஆதரவைக் கட்டியெழுப்பு வதிலும், ஆனால், பலமான ஜனநாயக ரீதியிலான குடிமக்களுக்கு அறிவூட்டுவதிலும் நடைமுறையிலான முயற்சிகளை விஸ்தரிப்பதில் உண்மையான பெறுமதி இருக்கலாம் என்பதை இது சுட்டிச் சொல்கின்றது.

நீண்ட கால அடிப்படையில், நியாயமானதும், இறுதியானதுமான சமாதானமொன்றைப் பராமரிப்பதற்காக, இனத்துவ அச்சமும், நம்பிக்கையீனமும் குறைக்கப்படுவது அவசியமானதாகும். நிரந்தரமான சமாதானமொன்றைச் சாதித்தல் வன்முறையில் குறைப்பொன்றைக் கொண்டுவருவதுடன், பொருளாதார மீள்கட்டியெழுப்பலுக்கு வழியை சமைக்கும். இவை இரண்டுமே இனத்துவ விரோதத் தன்மையைக் குறைப்பதில் சிறிதளவு தூரத்திற்குச் செல்லும். எனினும், இக் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கு தீவிரம் சார்ந்ததாக அதிகளவு செய்யப்பட முடியும்.

■ இனத்துவப் புரிந்துணர்வின் பெறுமதியையும், ஒன்றுடன் ஒன்று இணைந்து செயற்படுதலையும் KAPS II எடுத்துக் காட்டு வதுடன், உண்மையிலான ஒன்றிணைந்த பல்-இனத்துவ சமூகமொன்றை உருவாக்கு வதற்கும், மேம்படுத்துவதற்கும் அரசாங்க த்திற்கும், சிவில் சமூகத்திற்குமான அவசியத்தை கீழ் கோடிடுகின்றது.

■ இது தொடர்பில், ஆரம்பக் கட்டத்தி லிருந்தே, பல்மொழியிலான போதனையை ஆரம்பிப்பதற்கு பாடசாலைகள் ஊக்குவிக்கப் பட வேண்டும். பல்-இனத்துவ மனவுணர்வுடன் பாடசாலை பாடவிதானம் உருவாக்கப்பட வேண்டும்.

■ இரு மொழிகள் நீண்ட கால குறிக்கோளாக உள்ள அதேவேளை, உத்தியோகபூர்வ ஆவணங்கள், அரசாங் கத்துடன் பிரஜைகளின் தொடர்பு, மற்றும் வீதிச் சமிக்ஞைகள் ஆகியன உட்பட சகல அதன் நடவடிக்கைகளில் இரு மொழியிலான நடைமுறைகளுக்கு அரசாங்கம் ஊக்க மளிப்பது அவசியமானதாகும்.

■ இலங்கையில் யுத்தத்தினால் சீரழிந்துள்ள பகுதிகளை மீள்கட்டியெழுப்பு வதற்கான முக்கிய பணி முன்னுரிமை விடயமாக சகல தரப்புக்களினாலும் கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டும். யுத்தத்தினால் சீரழிந்துள்ள பகுதிகள் உடனடியான கவனத்தைப் பெறுவது அவசியமாக உள்ள அதேவேளை, சமாதானத்தின் அனுகூலங்களில் சகல குழுக்களிலும் பங்கெடுக்கும் விதமாக உதவி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

■ மீண்டும், சமாதானத்தை நோக்கிய ஜனநாயக பெறுமதிகளுக்கும், மனோநிலை களுக்கும் இடையிலான பலமான தொடர்புகள், இலங்கையின் இளைஞர்களை மட்டுமன்றி, ஆனால், பரந்தளவிலான மக்களை இலக்குப்படுத்தும் நடைமுறை யிலான நகரத்துக்குரிய மக்களின் கல்விச் செய்திட்டங்களைப் பலப்படுத்துவதிலும், விஸ்தரிப்பதிலும் சார்பாக இருப்பதை வாதிக்கின்றது. ஜனநாயக ஆட்சியை மேம்படுத்தும் அதேவேளை சமாதானத்தைப் பேணுவதற்கான வாய்ப்பு கவனித்தும் கவனியாது விடப்படலாகாது.

இலங்கையின் சமாதானத்தை நோக்கிய பொதுசன மனோநிலைகளின் விரிவான அளவீடுகளாக KAPS I மற்றும் II ஆகியன விளங்குகின்றன. இதனால், இலங்கையில், நியாயமானதும், இறுதியானது மான சமாதானத்திற்கான பொதுசன ஆதரவின் அகலத்தையும், ஆழத்தையும் பலப்படுத்து வதையும், விஸ்தரிப்பதையும் நோக்கி இவ்வாய்விலிருந்து தோன்றுகின்ற சகல விதந்துரைப்புகள் இரண்டுமே தவிர்க்க முடியாதது என்பதுடன், பொருத்தமானதுமாகும். கடந்த வருடத்தின் அனுபவமானது சமாதானத்திற்கான கோரிக்கையை அதிகரி த்தல் உண்மையாகவே விரும்பத்தக்கது என்ற அதே வேளை, இலங்கையில் சமாதான த்திற்கான பிரதான தடை பெரிதுமே விநியோகத்தின் ஒன்றாகும். இதை எளிதாகச் சொல்வதென்றால், பொதுமக்களின் ஆதரவுக்கும், மனவுறுதிக்கும் பதிலிறுப்பாக சமாதான நடைமுறையின் முன்னேற்றமடை வதில் நாட்டின் அரசியல் நிறுவனங்களினதும், செயற்பாட்டாளர்களினதும் சார்பாக மிகவும் சிறிதளவு முயற்சியும் சாமர்த்தியமுமே உள்ளது. சமாதானத்திற்கான கோரிக்கையை மேம்படுத்துவதற்கு அதிக தேவைகள் செய்யப்பட வேண்டும். ஆனால், நல்ல நம்பிக்கையுடன் பேச்சுவார்த்தை மேசைக்கு மோதலுக்கான பலதரப்பட்ட தரப்புக்களும் வருவதற்கு தயாராக இருந்தாலன்றி, இது

(C) Copyright - Social Indicator - December 2004

மட்டுப்படுத்தப்பட்ட பெறுமதியைத் தான் கொண்டிருக்கும்.

துரதிர்ஷ்டவசமாக, உண்மையான பேச்சுவார்த்தைகளுக்கு அவசியமான ஆலோசனைகளை வழங்குவதற்கு அல்லது நல்லெண்ணத்துடன் பேரம்பேசுவதற்கு பேச்சுவார்த்தை மேசையில் அமர்வதற்கு இலங்கையின் தலைவர்களை எவ்வாறு வழிப்படுத்துவது என்பதை எமக்குச் சொல்வதற்கு KAPS I மற்றும் II ஆகியன சிறிதளவையே கொண்டிருக்கும். எனினும், KAPSஇலிருந்து வெளிப்படுகின்ற ஒரு விதந்துரைப்பானது, நாட்டின் அரசியல் தலைவர்கள், கொள்கை வகுப்போர், மற்றும் இனத்துவ, மற்றும் சமய உயர்பீடத்தினர் ஆகியோரை இலக்குப்படுத்திய பொதுசன தகவல் இயக்கத்தை விருத்தி செய்வதாக விளங்குவது முக்கியத்துவமாகும். கடந்த இரு வருடங்களாக இலங்கையில் அரசியல் தலைவர்களுடனும், மற்றும் உயர்பீடத்தினருடனும் பேச்சுவார்த்தைகள் இலங்கையில் பொதுசன கருத்தின் உயர்பீட அறிவு மாறாநிலைத்தன்மையினாலும், தூரநோக்கினாலும், கணிசமானளவு திரித்துக் கூறப்பட்டுள்ளது. எல்லோரையும் போன்று அரசியல் தலைவர்கள் எதிரிடையாக, தகவலை அகற்றுவதற்கு முனைகின்ற அதேவேளை, அநேகமாக அவர்கள் ஏற்கனவே தெரிந்து வைத்திருந்ததை உறுதிப்படுத்தும் தகவலைப் பார்ப்பதுடன், செவிமடுப்பார்கள்.

இதுகாறும் உள்ள நிலையில், நித்தமும் ஈடுபாடுள்ள நலன்களுடனான உரத்த குரல்களைக் கொண்டவர்களுக்கு மிகவும் தெளிவாக செவிமடுப்பதற்கும் அவர்கள் முயல்கின்றார்கள்.

தலைவர்கள் தம்மைப் பின்பற்றுபவர்களுடனும், வாக்காளர்களுடனும் தொடர்பைக் கொண்டிருக்கவில்லை என்பது பிரச்சினை அல்ல. இதற்குப் பதிலாக, பொதுசனக் கருத்து, நிதமும் திரிபுபடுத்தப்பட்டு, நிறைவானதல்ல என்பதே அவர்களது புரிந்துணர்வு என்பதுடன், இக்கருத்து உண்மையானது என்ற வகையிலேயே அவர்கள் செயற்படுகின்றார்கள். உதாரணமாக, அரசியல் தலைவர்களும், பகுப்பாய்வாளர்களும் ஒத்துக் கொண்டதற்கு, மரபுரீதியிலான புத்தியுடைமைக்கு மாறாக, இலங்கையில் இணக்கப்பாட்டிலான சமமான உடன்படிக்கைகளுக்கு பலமான எதிர்ப்பு தென் மாகாணத்தில் அன்றி, ஆனால், வட மத்திய மாகாணத்தில் உள்ள சிங்களவர்கள் மத்தியில் செறிந்துள்ளதென KAPS I மற்றும் II ஆகியவற்றிலிருந்து சான்று தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

அந்த மரபுரீதியிலான புத்தியுடைமை முற்றிலும் தவறானதல்ல. உண்மையில், தென் மாகாணத்திலும் சமாதான இணக்கப்பாட்டுக்கு கணிசமானளவு எதிர்ப்புள்ளது. ஆனால், பெருமளவு தலைவர்கள் பாராட்டுவதாகத் தெரிகின்ற வாக்குறுதிகளுக்கு தென் மாகாணத்தில் மிக அதிகளவு ஆதரவுள்ளது.

சமாதானத்திற்கான உண்மையான தன்மையினதும், பொதுசன ஆதரவின் அளவினதும் மீது இலங்கைத் தலைவர்களின் சிறந்த கல்வியானது தைரியமான நடவடிக்கைக்கு அவர்களுக்கு ஊக்கமளிக்கும் அல்லது பொதுமக்களின் சமாதானக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அது பாதுகாப்பானது என வழிப்படுத்தும். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் சமாதான ஆலோசனைகளின் பலவீனமான விநியோகத்தைக் கவனத்திற்கு எடுப்பதற்கு வேறு மேலதிக செயற்திறனான விருப்புக்கள் இல்லாதவிடத்து, இலங்கையின் கருத்து, கொள்கை வகுப்பாளர்களுக்காக வடிவமைக்கப்பட்ட கருத்தரங்குகளினதும், ஊடகங்களினதும், பல்கலைக்கழகங்களினதும் மத்தியில், அதன் உபயோகத்தை மேம்படுத்துவதிலும், KAPS தரவை பரந்த ரீதியாக விநியோகிப்பதை கொண்ட மூலோபாயத்திலும் அது கணிசமானளவு அர்த்தத்தை வழங்குகின்றது. ¶

சமூகக் காட்டி (Social Indicator) ஒரு சுயேச்சையான சமூக ஆராய்ச்சித் தாபனமாகும். இது சமூக - பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகள் மீது வாக்கெடுப்பை நடத்துகிறது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சபையின் கீழ் தொழிற்படும் சமூகக் காட்டி 1999 செப்டெம்பரில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், சமூக, அரசியல் பிரச்சினைகள் மீது இலங்கையில் நிரந்தரமானதும், உயர்தொழில் ரீதியானதும், சுயேச்சையானதுமான வாக்கெடுப்பு வசதிக்கான நீண்ட கால வெற்றிடத்தை நிரப்புகின்றது.

அதிகாரமளிப்பின் கருவியொன்றாக வாக்கெடுப்பு விளங்குகின்றது. தம்மைப் பாதிக்கும் பிரச்சினைகள் மீது தமது அபிப்பிராயங்களை அமைதியான பெரும்பான்மையான பொதுமக்கள் வெளிப்படுத்தும் ஒரு வழிமுறையாகும். முந்திய சமூகப்பிரச்சினைகள் மீது ஆய்வுகளை நடத்துவதே எமது குறிக்கோளாகும். இதன் மூலம் பொதுசன கொள்கை வாதத்தில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய பொதுசன அபிப்பிராயத்தின் ஊடாக வழிமுறைகளை வழங்குகின்றது.

**வெளியிட்டோர்:**
சோஷல் இண்டிகேட்டர்
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்
105, 5ஆவது ஒழுங்கை
கொழும்பு 03.
இலங்கை
**தொலைபேசி** : +9411 2370472
**ஃபக்ஸ்:** +9411 2370475
**ஈமெயில்:** cpapoll@diamond.lanka.net
**இணைய தளம்:** http://www.cpalanka.org

*Printed by : Sasmitha Prints. Piliyandala. Tel/Fax : 011-2608456*